# AVERAGE & AGES ASSIGNMENT

1. The average height 20 students in a class was calculated as 160 cm. On verification it was found that one reading was wrongly recorded as 132cm instead of 152 cm. Find the correct mean height.
ஒரு வகுப்பில் உள்ள 20 மாணவர்களின் சராசரி உயரம் 160 செ.மீ எனக் கணக்கிடப்பட்டது. சரிபார்க்கும் போது 152 செ.மீ என்பதை 132 செ.மீ என தவறாக எடுத்துக் கொள்ளப்பட்டதாகத் தெரிய வந்தது. சரியான சராசரி உயரம் காணவும்.
a. 160.5cm b. 161cm c. 162cm d. 159 cm

2. The mean of the 5 number is 32. If one of the numbers is excluded, then the mean is reduced by 4. Find the excluded number.
5 எண்களின் சராசரி 32. அவ்வெண்களில் ஒன்றை நீக்கும் போது, சராசரியில் 4 குறைந்தால் நீக்கப்பட்ட எண்ணை காணவும்.
a. 46 b. 50 c. 52 d. 48

3. The average of five consecutive odd numbers is 95. What is the fourth number in the descending order?
தொடர்ச்சியாக ஐந்து ஒற்றைப்படை எண்களின் சராசரி 95. இறங்கு வரிசையில் நான்காம் எண் என்ன?
a. 91 b. 95 c. 97 d. None of these

4. The average height of 10 students in a class was calculated as 166 cm. On verification it was found that one reading was wrongly recorded as 160 cm instead of 150 cm. Find the correct mean height.
ஒரு வகுப்பிலுள்ள 10 மாணவர்களின் சராசரி உயரம் 166 செ.மீ எனக் கணக்கிடப்பட்டது. தகவல்களைச் சரிபார்க்கும்போது ஒரு மதிப்பு 150 செ.மீ.க்கு பதிலாக 160 செ.மீ என்று குறிப்பிடப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டது எனில் சரியான சராசரி உயரத்தைக் காண்க.
a. 175 cm b. 165 cm c. 155 cm d. 160 cm

5. The total marks obtained by a student in Physics, Chemistry and Mathematics together is 120 more than the marks obtained by him in

Chemistry. What is the average marks obtained by him in Physics and Mathematics together?
இயற்பியல், வேதியியல் மற்றும் கணிதம் ஆகியவற்றில் ஒரு மாணவர் பெற்ற மொத்த மதிப்பெண்கள் வேதியியலில் அவர் பெற்ற மதிப்பெண்களை விட 120 அதிகம். இயற்பியல் மற்றும் கணிதத்தில் அவர் எடுத்த மதிபெண்களின் சராசரியை காண்க.

a. 40 b. 60 c. 120 d. Cannot be determined

6. The average of five consecutive numbers A, B, C, D and E is 48. What is the product of A and E?
A, B, C, D மற்றும் E ஆகிய ஐந்து தொடர்ச்சியான எண்களின் சராசரி 48. A மற்றும் E இன் பெருக்கல் பலன் என்ன?

a. 2400 b. 2300 c. 1300 d. 3300

7. A batsman makes a score of 87 runs in the $17^{th}$ inning and thus increases his average by 3. Find his average after $17^{th}$ inning
ஒரு மட்டைபந்தாட்டகாரர் 17வது ஆட்டத்தில் 87 ரன்கள் எடுத்தார், இதனால் அவரது சராசரி 3 அதிகரிக்கிறது எனில் 17-வது ஆட்டத்திற்கு பிறகு அவரது சராசரி என்ன?

a. 38 b. 39 c. 37 d. 49

8. The mean of 9 observations is 24. Find the sum of the 9 observations.
9 விவரங்களின் சராசரி 24 எனில், அவ்விவரங்களின் கூட்டுத்தொகையைக் காண்க.

a. 214 b. 216 c. 316 d. 116

9. Find the mean of the following data.
பின்வரும் தரவுகளின் சராசரியைக் காணவும்
5.1, 4.8, 4.3, 4.5, 5.1, 4.7, 4.5, 5.2, 5.4, 5.8, 4.3, 5.6, 5.2, 5.5

a. 5.1 b. 5.2 c. 5.0 d. 5.5

10. If the average of m numbers is $n^2$ and that of n numbers is $m^2$, then the average of (m+n) numbers is
m எண்களின் சராசரி $n^2$ ஆகவும், n எண்களின் சராசரி $m^2$ ஆகவும் இருந்தால் (m + n) எண்களின் சராசரி என்ன?

a. m – n b. mn c. m + n d. $\frac{m}{n}$

11. Six years ago, the ratio of the ages of Kunal and Sagar was 6 : 5. Four years hence, the ratio of their ages will be 11 : 10. What is Sagar's age at present ?

6 வருடங்களுக்கு முன்பு குணால் மற்றும் சாகரின் வயது விகிதம் 6 : 5 நான்கு வருடங்களுக்கு பிறகு அவர்களின் வயது விகிதம் 11 : 10 எனில் சாகரின் தற்போதைய வயது என்ன?

a. 16 b. 18 c. 20 d. cannot be determined

12. Rajan got married 8 years ago. His present age is $\frac{6}{5}$ times his age at the time of his marriage. Rajan's sister was 10 years younger to him at the time of his marriage. The age of Rajan's sister is :

ராஜன் 8 வருடங்களுக்கு முன்பு திருமணம் முடித்தார். அவருடைய தற்போதைய வயதானது திருமணத்தின் போது உள்ள வயதின் $\frac{6}{5}$ மடங்காகும். ராஜனின் சகோதரி திருமணத்தின் போது இவரை விட 10 வயது இளையவர் எனில் ராஜனின் சகோதரியின் வயது என்ன?

a. 32 years b. 36 years c. 38 years d. 40 years

13. Sneha's age is $1/6$th of her Father's age. Sneha's Father's age will be twice of vimal's age after 10 years. If vimal's Eighth birthday was celebrated two years before, then what is Sneha's present age?

ஸ்னேகாவின் வயது அவளது அப்பாவின் வயதில் $1/6$ பங்கு ஆகும். 10 வருடத்திற்கு பிறகு விமலின் வயது அப்பாவின் வயதின் இரு மடங்காகும். இரு வருடங்களுக்கு முன்பு விமல் தனது 8வது பிறந்த நாளை கொண்டாடினார். எனில் ஸ்னேகாவின் தற்போதைய வயது?

a. $6\frac{2}{3}$ b. 24 c. 30 d. None of these

14. Average age of Y, Z and A is 27 years. Average age of Y and Z is 28 years, average age of Z and A is 24.5 years and Average age of A and Y is 28.5 years. Find the age of the oldest among them?

Y, Z மற்றும் A ன் சராசரி வயது 27 வருடங்கள், Y மற்றும் Z ன் சராசரி வயது 28. வருடங்கள், Z மற்றும் A ன் சராசரி வயது 24.5 வருடங்கள். A மற்றும் Y ன் சராசரி வயது 28.5 வருடங்கள். எனில் இந்த மூவரில் பெரியவரின் வயது என்ன?

a. 25 years b. 24 years c. 32 years d. 35 years

15. Gokul is twice as old as Velu and half as old as Arun. If the sum of Arun's and Velu's ages is 85 years, what is Gokul's age in years?

கோகுலின் வயது வேலுவைப் போல் இரண்டு மடங்கு மற்றும் அருணைப் போல் பாதி வயது ஆகும். அருண் மற்றும் வேலுவின் வயதுகளின் கூடுதல் 85 வருடங்கள் எனில் கோகுலின் வயது என்ன?

a. 34 b. 36 c. 68 d. cannot be determined

16. Ram is 5 years older than Anand and Anand is 3 years older than Kiran. If sum of present ages of Anand and Ram is 55 years, then find age of kiran 7 years hence?
ராம் என்பவர் ஆனந்தை விட 5 வயது பெரியவர் மற்றும் ஆனந்த் கிரண் - யை விட 3 வயது பெரியவர். ஆனந்த் மற்றும் ராமின் தற்போதைய வயதின் கூடுதல் 55 வருடங்கள் எனில், 7 வருடத்திறகு பிறகு கிரணின் வயது என்ன?
a. 27 b. 32 c. 29 d. 22

17. Aishwarya's present age is $33\frac{1}{3}\%$ of his mother's present age. Aishwaraya's brother present age is 11 year, and he is 34 years younger to his mother. What is present age of Aishwarya?
ஐஸ்வர்யாவின் தற்போதைய வயது அவரது அம்மாவின் தற்போதைய வயதில் $33\frac{1}{3}\%$ ஆகும். ஐஸ்வர்யாவின் சகோதரனின் வயது 11 மற்றும் அவர் அவருடைய தாயாரை விட 34 வயது இளையவர் எனில் ஐஸ்வர்யாவின் தற்போதைய வயது என்ன?
a. 15 b. 12 c. 18 d. 21

18. I am three times as old as my son 15 years hence, I will be twice as old as my son. The sum of our ages is
என்னுடைய வயது என் மகனின் வயதைப் போல மூன்று மடங்கு ஆகும். 15 வருடங்களுக்கு பிறகு, என்னுடைய வயது என் மகனின் வயதைப் போல இருமடங்கு எனில், இருவரின் வயதின் கூடுதல்
a. 48 years b. 60 years c. 64 years d. 72 years

19. Six years ago, age of P was 75% of age of Q at that time and sum of present age of Q and present age of R is 56 years. If R is two years older than P, then find sum of present age of P and present age of R?
6 வருடங்களுக்கு முன்பு, P யின் வயதானது, Q யின் வயதில் 75% அதே வருடத்தில் Q மற்றும் R இவர்களின் வயதின் கூடுதல் 56 வருடங்கள். R என்பவர் P ஐ விட இரண்டு வயது பெரியவர் எனில் P மற்றும் R ன் தற்போதைய வயதின் கூடுதல் எவ்வளவு?
a. 48 years b. 50 years c. 42 years d. 54 years

20. Father is 5 years older than the mother and the mother's age now is thrice the age of her daughter. The daughter is now 10 years old. What was the father's age when the daughter was born?
தந்தையின் வயது தாயாரின் வயதைவிட 5 வயது அதிகம். தற்போதைய தாயின் வயது அவளுடைய மகளின் வயதைப்போல மூன்று மடங்கு ஆகும். மகளின் தற்போதைய வயது 10 எனில், மகள் பிறக்கும் போது தந்தையின் வயது என்ன?
a. 20 years b. 15 years c. 25 years d. 30 years

# AVERAGE & AGES ASSIGNMENT
## Answer Key

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| B | D | D | B | B | B | B | B | C | B |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 |
| A | C | A | C | A | C | A | B | B | C |